

# ஹெல்தி 365 செயலிக்கும் மற்ற உடலுறுதி கண்காணிப்பு மூலங்களுக்கும் இடையே உள்ள உங்கள் உடலுறுதி தரவுகளின் முரண்பாடுகளை எவ்வாறு சரிசெய்வது

ஒவ்வொரு மூன்றாம் தரப்பு செயலியிலும் காலடிகள் மற்றும் செயலில் உள்ள நேரம்/MVPA நிமிடங்களைக் கண்காணிக்க வெவ்வேறு கணிப்புமுறை உள்ளது. இது உடற்பயிற்சி தரவுகளில் முரண்பாட்டிற்கு வழிவகுக்கலாம்.

உங்கள் மூன்றாம் தரப்பு செயலியை Healthy 365 செயலியுடன் ஒத்திசைக்கும் முன், உங்கள் கண்காணிப்புச் சாதனத்தை மூன்றாம் தரப்பு செயலியுடன் ஒத்திசைக்கவும்.

குறிப்பு: உடற்பயிற்சி செயல்பாட்டுப் பதிவுகளை இழக்காதிருக்க, குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு ஒருமுறை உங்கள் உடற்பயிற்சி தரவை Healthy 365 செயலியுடன் ஒத்திசைக்க வேண்டும்.

### Samsung கைக்கடிகாரம் பயன்படுத்துவோருக்கான கூடுதல் குறிப்பு

உங்கள் MVPA தரவை வாசிப்பதற்கு Healthy 365 செயலிக்கு அனுமதியளிக்க, உங்கள் உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தில் "workout mode" பயன்முறையை நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

### Apple கைக்கடிகாரம் பயன்படுத்துவோருக்கான கூடுதல் குறிப்பு

உங்கள் Apple கைக்கடிகாரத்திற்கு
கைபேசியைவிட முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முன்னுரிமை பட்டியலைப் பார்க்கவும்.




### படிநிலை 1

"Apple Health" செயலியைத் திறந்து, "Steps" என்ற துணைப்பிரிவைத் தட்டவும்.




### படிநிலை 2

கீழே உருட்டிச்சென்று, "Data Sources & Access" என்பதைத் தட்டவும்.







### படிநிலை 3

"Edit" என்பதைத் தட்டவும். அதன் பிறகு, தரவு மூலத்திற்குப் பக்கத்தில் உள்ள "Change Order" விசைமீது விரலை வைத்தபடி, பட்டியலில் மேலே அல்லது கீழே இழுக்கவும்.



## HUAWEI Health பயன்படுத்துவோருக்கான கூடுதல் குறிப்பு

HUAWEI Health செயலியிலிருந்து தரவை மீட்டெடுக்க Healthy 365 செயலிக்கு தேவையான அனைத்து அனுமதிகளும் வழங்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவும்.




### படிநிலை 1

Healthy 365 செயலி HUAWEI Health செயலியிலிருந்து உங்கள் உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி தரவை அணுகுவதற்கு முன்னதாக அனுமதிகளை வழங்கிய பிறகு, இரண்டு செயலிகளுக்கும் இடையே கூடுதல் இணைப்பை நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

குறிப்பு: நீங்கள் இதை ஒரு முறை மட்டுமே செய்ய வேண்டும்.

தொடர்வதற்கு "Continue" என்பதைத் தட்டவும்.




### படிநிலை 2

HUAWEI Health செயலியில் உள்நுழைந்து, திரையில் காட்டப்படும் படிப்படியான வழிமுறைகளின்படி செய்யவும்







### படிநிலை 3

HUAWEI Health செயலியில் உள்ள உங்கள் உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி தரவை Healthy 365 அணுகுவதற்கு "Link" என்பதைத் தட்டவும்.

"Confirm" மீதும், பிறகு "Done" மீதும் தட்டவும். நீங்கள் மீண்டும் டாஷ்போர்டுக்கு அழைத்து வரப்படுவீர்கள்.









### *படிநிலை 4*

*உங்கள் காலடிகள் மற்றும் MVPA தரவை HUAWEI Health செயலியிலிருந்து Healthy 365 செயலிக்கு ஒத்திசைக்க, "முகப்பு" பகுதிக்குச் சென்று "திய உடலளவு கண்காணிப்பானை ஒத்திசைக்க" என்பதைத் தட்டவும்.*

*குறிப்பு: நீங்கள் அனுமதி வழங்கிய பிறகு Healthy 365 செயலியில் உங்கள் தரவு தெரிவதற்கு ஒரு மணிநேரம் வரை ஆகலாம்.*